2004 நவம்பர் 18]

அதுவும், ஒரு அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டுமானால் 4 கிலோ மீட்டர் தொலைவிலே ஈச்சட்டிபாளையம் என்ற கிராமத்திலே ஒரு அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் 15 கிலோ மீட்டர் தொலைவிலே கோபிசெட்டிப்பாளையம் மற்றும் சத்தியமங்கலத்திலே அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலேயே பதிலுக்கான சில குறிப்புகளும் வந்திருக்கின்றன. அங்கே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மக்களும், அதேபோல மலைவாழ் மக்களும் வந்து செல்வதால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று, வருகின்ற ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ப. சிதம்பரம்.

திரு. ப. சிதம்பரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடத்தூர் ஊராட்சி, கடத்தூர் ஆரம்ப துணை சுகாதார நிலையம் முதலில் செயல்பட்டு வந்தது. ஆனால், தற்போது செயல்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அரசு துணை சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றித் தர ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடத்தூர் துணை சுகாதார நிலையத்தைத்தான் ஆரம்பச் சுகாதார நிலையமாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. சிதம்பரம்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 30,000 பேர் இருந்தால் அந்த இடத்திலே ஆரம்பச் சுகாதார நிலையம் வர வேண்டுமென்பதுதான் டெல்லி வற்புறுத்துகிற ஒரு நியதி. அந்த

அடிப்படையிலே ஆரம்பிக்க முடியாது என்று சொன்னார்கள். ஒரு இலட்சம் மக்கள் தொகை இருக்கக்கூடிய இடங்களிலேகூட இன்னும் சில இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் வராமல் இருக்கின்றன. வேலூர் ஒன்றியத்திலே ஊசூர் என்ற இடத்திலே அந்த நிலை இருக்கின்றது. அது 21 கி.மீ.-ல் அலமேலுமங்காபுரத்தில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பதற்காக, கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னாலேகூட இதே அவையிலே ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டு கொடுப்பதாகச் சொன்னது இன்னமும் வரவேயில்லை. அங்கு, 1 இலட்சம் மக்கள் தொகைக்குமேல் இருக்கிறது. ஆகவே, வேலூர் ஒன்றியத்தில் ஊசூர் என்ற இடம் 21 கி.மீ. தொலைவில் இருக்கிற காரணத்தினாலே அலமேலுமங்காபுரத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 30,000 மக்கள் தொகை கொண்ட இடத்திலேதான் அரசு ஆரம்பச் சுகாதார நிலையம் மத்திய அரசுமூலம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் கூறினார்கள். இருந்தபோதிலும் அவர் இப்போது கூறும்போது, அங்கே ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்ட கிராமமாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். அதையும் ஆய்வு செய்து அதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 34, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

34—

இரத்த வங்கி

*** 37834—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—